*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07032026

# Devotion and Grace in Tirutondar Puranam

**B. Dhanraj[1*]. Dr. E.Karpagam[2],**

[1]Reg. No. BDU2010630420, Part-time Ph.D. Research Scholar, (Research Department of Tamil),Government Arts College (Autonomous), Thanthonimalai, Karur - 639 005. Affiliated to Bharathidasan University.
[2]Associate Professor (Department of Tamil Studies), Government Arts College (Autonomous), Thanthonimalai, Karur - 639 005. Affiliated to Bharathidasan University

[*]Correspondence: dhanrajb5696@gmail.com

**Article Info**
Received on 26-Feb-2026, Revised on 27-Feb-2026, Accepted on 01-Mar-2026, Published on 06-Mar-2026

## ABSTRACT

*Mount Kailash, the abode of Shiva, who is beyond comprehension and attainment by the world, is the embodiment of His immense, selfless grace towards all living beings, acquiring divine grace. It shines with the glory of being the seat of the Lord with the Goddess, and it is of pure white hue. Upamanyu Muni meditated upon Lord Shiva, the Consort crowned with the evening crescent. As he clarified to the sages that Vantondar Perunthagai Sundaramurthy Nayanar, who appeared in South India by the grace of God, was ascending to Mount Kailash, both hands of Upamanyu Muni rose above his head.This article aims to explore in detail how the 63 Nayanmars, through various paths, manifested the birthless Lord Shiva, what the special qualities of the devotees are, and what kind of principles they followed.*

***KEYWORDS:*** *Sakthi Jothi, Nilam Pugum Sorkal, Thinai concept, Five Thinai, Sangam literature, feminine voice, emotion, society, natural symbols, feminism.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

# திருத்தொண்டர் புராணத்தில் பக்தியும் அருளும்

[1]**பா. தன்ராஜ்,** [BDU2010630420 ], பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழாய்வுத்துறை),
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), தாந்தோன்றிமலை, கரூர் - 639 005.
பாரதிதாசன் பல்கலைக்கழகத்தோடு இணைவு பெற்றது
[2]**முனைவர் எ. கற்பகம்,** இணைப் பேராசிரியர் (தமிழாய்வுத்துறை)
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), தாந்தோன்றிமலை, கரூர் - 639005
பாரதிதாசன் பல்கலைக்கழகத்தோடு இணைவு பெற்றது

**ஆய்வுச் சுருக்கம்**

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியராயுள்ள சிவபெருமான் உயிர்கள் மீது வைத்த கைமாற்ற பெருங்கருணையால் திருவருளையே பெற்றது திருக்கயிலாய மலை. நங்கைபாகராய் வீற்றிருந்து அருளும்பேறு ஒளிர்வது, தூயவெண்ணிறம் உடையது. அந்திவான் பிறைசூடிய அண்ணலாய சிவபிரானை உபமன்னிய முனிவர் நினைத்தார். இறைவனருளால் தென்னாட்டில் தோன்றிய வன்தொண்டர் பெருந்தகை சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கயிலைக்கு எழுந்தருள்கின்றார் என முனிவர்களுக்கு ஐயவிளக்கம் கூறியநிலையில் உபமன்னியமுனிவரின் இருகரமும் அவர்தம் தலைக்கு மேலாக ஏறின. பிறப்பில்லாச் சிவபிரானை 63 நாயன்மார்களும் பல்வேறு நெறிகளால் எவ்வாறு ஆல்பாவிக்க செய்தனர் வடியவர்களின் சிறப்புகள் என்ன அவர்கள் எவ்வாறான நெறிகளை பின்பற்றினர் என்பதனை எல்லாம். விரிவாக ஆராய்வதை கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**குறிப்புச் சொற்கள்**. தோழமை, பக்தி நெறி, தடுத்தாட்கொள்ளுதல், இல்லறம், அருள் பாவித்தல்.

**முன்னுரை**

தமிழ் மொழியில் இருந்து **உபமன்யு விலாசம்** என்ற பெயரில் வடமொழிக்கு சென்றநூல் **பெரியபுராணம்**.புராணங்கள் எதை பற்றி பாடுபொருளாகக் கொள்ளுகின்றனவோ அவை அப்பாடு பொருள் பெயரையே கொள்ளும் ஆனால் தொண்டர்களின் பெருமையைச் சொல்லும் நூல் பெரிய புராணம் என்றாயிற்று. இதில் இருந்து ஆண்டவனை விடவும் அடியவர்கள் உயர்ந்தவர்கள் என்பது புலனாகிறது. இத்தகு சிறப்பு வாய்ந்த பெரிய புராணத்தில் பக்தி நெறியையும் இறைவனின் அருளையும் இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்புகுவோம் .

**சிறுத்தொண்டர் புராணம்**

சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் சைவ அடியவர்தம் பெருமையை உலகுக்கு பறைச் சாற்றிக் கொண்டுள்ளது. பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் தொண்டர்களின் வாழ்வைச் சொல்வது போல நமக்கெல்லாம் வாழ்வியலை எடுத்து இயம்புகின்ற வாழ்வியல் நூலாக அமைந்துள்ளது.பெரிய புராணத்தில், அடியார்களும் அவர்தம் துணைவியாரும் இறைவன் மீதள்ள



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

tamilmanam

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

பேரன்பின் வெளிப்பாட்டின் மேன்மையை எந்த நடைமுறையும் இன்றி உள்ளம்பால் இறைவனை வசப்படுத்தியதொண்டர்களின் வரலாற்றை கூறும் காப்பியமாக விளங்குவதால், சேக்கிழார் பெருமான் இந்நூலுக்கு திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிட்டுள்ளார். பெரியபுராணத்தில், சேக்கிழார் பெருமான், தொண்டர் பண்பையே முதன்மைப்படுத்தி, தொண்டு என்ற பண்புக்கே காப்பியத் தலைமை அளித்துள்ளார். அத்தகைய தொண்டை மேற்கொண்டவர்களுக்கத் **'திருக்கூட்டம்'** எனப் பட்டமளித்துள்ளார். இத்தகைய பண்ணைப் பற்றிய விளக்கமே சிறப்பு' என்ற தலைப்பில் பாடப்பட்டுள்ளது.

**''திருக்கூட்ட'தொண்டு என்ற பண்பின் வரலாறுதான் பெரியபுராணம்"(பெரியபுராணம் ஓர் ஆய்வு ப.எண்34)**

பெரிய புராணத்தின் பாவிகம் என கருதப்படுவது தொண்டு என்ற பண்பாகும்.

**''பாவிகம் என்பது காப்பியப் பண்பு''**

(தண்டியலங்காரம் நூட்பா 89)

பெரிய புராணத்தில் பக்தி சுவை மிகந்துள்ளபடியால் இதன் பாவிகம் பக்தி என கருதுபவர்களம் உண்டு. ஆனால் **உண்மையில், தொண்டு மற்றும் குறிக்கோள் வாழ்க்கை என்ற உளவியல் பண்புகளே இதன் பாவிகம் ஆகும்.** (பிரணவ் தமிழியல் ஆய்விதழ் பா.எண்02)**என்கிறார் ஆய்வாளர் வசந்தகுமாரி**பெரிய புராணத்தின் மூல நூலாகிய 'திருத்தொண்டதொகை' பாடிய சுந்தரரும் அப்பாலும் அடி சார்ந்தார் அடியார்க்கும் அடியேன் எனப் பாடுகிறார். இங்குஅப்பாலும்' என்ற சொல்லின் மூலம் காலம், நாடு போன்ற பரிமாணங்களை கடந்த தொண்டர்கள் என்றுக் கூறுகிறார்.தொண்டுள்ளம் கொண்டு தனக்கென வாழாமல் சமூக அக்கறைக் கொண்ட தொண்டர்கள் உலகம் முழுவதும் எக்காலத்திலும் வாழ்ந்துள்ளனர்.இவ்வாறு பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில், பல்வேறு பணிகளில் இருந்த தொண்டர்களின் சிறப்பியல்புகளை திருக்கூட்டச் சிறப்பு எடுத்தாலுகிறது.

**பக்தி நெறி**

நிபந்தனையற்ற அன்பு எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி, அன்பிற்காகவே அன்பை இறைவனிடம் செலுத்துவதையும் நான், எனது,என்ற எண்ணத்தை விட்டு, இறைவன் கொடுத்த உடலையும் உள்ளத்தையும் இறைவனுக்கே அர்ப்பணிப்பதையும் பக்தி நெறி என்று கொள்லாம். மனிதனுக்கு மனிதன் மாறுபடுவதாக பக்தி நெறி அமைகிறது.



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**''விரும்பும் சரியை முதல் மெய்ஞானம் நான்கும்**

**அரும்பு மலர் காய் கனி போன அன்றோ பராபரமே"**

**தாயுமானவர் [திருவருட்பா பா எண்157]**

என்று தாயுமானவர் பாடியருளியுள்ளார். பக்தி நெறி குறித்து சரியை **அரும்பு போன்றது என்றும், கிரியை மலர் போன்றது என்றும், யோகம் காய் போன்றது என்றும், ஞானம் கனி போன்றது என்கிறார் (சர்வதேச தமிழ் ஆய்வு இதழ் ப.எண்2)** ஆய்வாளர் சகுந்தலை தனது ஆய்வுக் கட்டுரையில் இவ்வாறாக தெரிவிக்கிறார். மேலும் பக்தி நெறி என்பதற்கு கலையரசி என்னும் ஆய்வாளர்**''அந்த அன்பு வழிபட்ட நெறியே பக்தி நெறி. அந்த பக்தி நெறியே மனித வாழ்வின் உயர்நிலை அடிப்படை நெறி''**

**(களஞ்சியம் சர்வதேச தமிழ் ஆய்வு இதழ் ப.எண்1)**

இவ்வாறான விளக்கத்தை நல்குகிறார்.

**இல்லறம் கடந்த பக்தி நெறி**

இல்லறவாழ்வையில் இருந்து வெளியேறி அரும்பாடுப்பட்டுச் செயற்கறியச் செயல்களைச் செய்த இருவர் மங்கையர்க்கரசியார், திலகவதியார். திலகவதியார் இல்லறம் வேண்டி மகிழ்ந்து சென்றும் இல்லறம் அமையவில்லை ஏமாற்றம் அடைந்தார்.என்பதை,

**"தன் மதுர மாங்கனியில் இருந்ததளை**

**நறுங்கூந்தல்அன்னமளை யார் தாமுது"**

**(திருத்தொண்டர் புராணம் பா.எண் 23)**

**"அம்பிகை திருவுள்ளத்தின் அதிசயித்**

**தருளித் தாழ்ந்துதம்பெருமானை நோக்கி"**

**(திருத்தொண்டர் புராணம் 57)**

**"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றன்பிறவாமை வேண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும் மறவாமை வேண்டும்"**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 03 (March -2026)*
**www.tamilmanam.in**
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**(திருத்தொண்டர் புராணம் பா.60)**

**"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்ப்பா ராகாசம் அப்பொருளுந் தானே யவன்.''[நாயன்மாத்திறம் ப.எண்65)'**

**"அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன் இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான் எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக் எவ்வுருவோ நின்னுருவ மேது" (நாயன்மாத்திறம் ப.எண்66)**

பெரிய புராணம் இவ்வாறாகக் காட்சிப்படுத்துகின்றன. அதன் பின்னர் சிவபெருமானிடம் **பேய்** உரு வேண்டி தலைகீழாக நடந்து இமயம் தொட்டு சிவபெருமானே **அம்மையே** என்று கூறும் அருளையும் பெற்றார். காரைக்கால் அம்மை மங்கையர் போன்றே வைணவத்தில் கிருஷ்ணர் மீது அளவு கடந்த அன்பு கொண்டு போஜராஜனை விட்டு திருமணவாழ்வில் இருந்து வெளியேறிய வரலாறும் உண்டு.

இதனை,

**"அவளுக்கு திருமணம் ஆனாலும் மாலையில் கிருஷ்ணனை வழிபடுவதும், அவரை நோக்கி மனதார பாடுவது மட்டுமே தன் உலகமாக கொண்டு இருந்தாள். ஆனால் அவர் இப்படி உலகமே மறந்து இருப்பது அவருடைய கணவருக்கும், அத்தைக்கும் பிடிக்கவில்லை'' (மீராபாய் வாழ்க்கை வரலாறு ப.எண் 250)** இவ்வாறாக சுதந்திர ராஜலிங்கம் என்னும் ஆய்வாளர் தனது படைப்பில் குறிப்பிட்டுள்ளார்.

**இல்லற நெறி -விருந்தோம்பல்**

சிவனை வழிபடும் அடியவர்களுக்கு தொண்டு செய்கிறேன் என்பது சிறு தொண்டரின் நெறி. ஆனால் சிறுத்தொண்டரின் முடிவிற்கு அவரின் இல்லாளாகிய திருவெண்காட்டு நங்கையும் அவரது மகன் சீராளனும் உடல் படுதல் இவர்கள் இருவரும் ஏற்றுக்கொண்ட இல்லற நெறி என்னும் விருந்தோம்பல் பண்பு எனலாம். இவரைப் போன்ற இளையாங்குடி மாறனாயினரின் அடியவர்களுக்கு உணவு கிடைக்கும் நெறியினை அவர் மனைவி ஏற்று உடன் நின்று நடத்தலும் திருத்தொண்ட புராணத்தில் இல்லறத்தில் இருந்து பக்தியை காட்ட இயலும் அதனையும் இறைவன் ஏற்பார் அருளுவார் என்பதற்கான சான்றுகளாக அமைகின்றன.

**"அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால் எழுந்தருள் பெரியோய் ! ஈண்ட அமுதுசெய் தருள்க''**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**(திருத்தொண்டர் புராணம் பா.எண் 24)**

**"மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச் சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் தான்ம கிழ்ந்தே ஏலவார் குழலாள் தன்னோ டிடபவா கனனாய்த் தோன்றிச் சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி"**

**(திருத்தொண்டர் புராணம் பா.எண் 25)**

இவ்வாறான பாடல்கள் சான்று பகர்வதோடு,விருந்தோம்பல் பண்பினை சங்க இலக்கியமும் இல்லற நெறியில் விருந்தோம்பல் பண்பை,

**"கானவர்வில்லின் தந்தவெண்**

**கோட்டேற்றைப்புனையிருங்**

**கதுப்பின்மனையோள் கெண்டிக்குடிமுறைப்பகுக்கும்"**

**(நற்றிணை.336)**

இவ்வாறாக மேன்மைப்படுத்துகிறது. கோவலனை பிரிந்த கண்ணகியோ வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரிக்க இயலவில்லையே என்றுதான் விரும்புகிறாள்.திருக்குறளும் விருந்தோம்பல் பண்பினை,

**''அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**

**இன்சொலன் ஆகப் பெறின்"(திருக்குறள் 92)**

இவ்வாறாக காட்சிப்படுத்துகிறார். சிறுத்தொண்ட நாயனார் இருக்கு மகன் சீரழனை பரிசாகத் தந்து இறைவன் ஆட்கொண்டார். இளையாங்குடி மாறனாயனார் மற்றும் அவரது மனைவியை குப்பை கீரையை உணவாகஉண்டு அருள் பாவித்தார்.இல்லறத்தில் இருந்தபடியே இன்னொரு கடமைகளையும் செய்து தன்னையும் நேசிக்கும்அடியவர்களின் வீட்டு வாசலிலேயே சென்று அருள் வழங்கியதுஇவ்வாறான நிகழ்வுகளின் வழி தெளிவு. **"புதியவராகதம்மில் நாடிவரும் மக்களை விருந்தினர் எனகுறித்தனர். அவர்களுக்கு முறையாக உணவுபசரிப்பதே இல்லறகடமையாக கொண்டிருந்தனர்." (சர்வதேச தமிழாய்வு இதழ் ப.எண்04)**இவ்வாறாக பதிவு செய்கிறார்.

**கட்டற்ற பக்தி**

சிவபெருமானின் மீது கட்டற்ற பத்தியினால் கண்ணப்பன் என்னும் அடியவர் சிவபெருமான்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

கண்ணில் ரத்தம் வடிவதை கண்டு தனது கண்ணை எடுத்து சிவபெருமானுக்கு வைத்ததும். சிவபெருமான் கண்ணப்பருக்கு காட்சி தந்து ஆட்கொண்டார். சண்டிகேஸ்வரர் எனும் அடியவர் பாலை இவனுக்கு அளித்ததால் கோபம் அடைந்த தந்தையின் செயலால் காலை இழந்த சண்டிகேஸ்வரருக்கு சிவபெருமான் அருள் புரிந்துஇன்றளவும்சிவ ஆலயங்களில் சிவனைப் பார்த்தபடியாக சண்டிகேஸ்வரர் சன்னதி அமைந்திருப்பது சிவபெருமானின் அருளாக கொள்ளலாம்.பூசலார் என்னும் அடியவர் சிவபெருமானுக்கு ஆலயம் இருப்ப விரும்பி தன் உள்ளத்தையே கோவிலாக அமைத்து குடமுழுக்கு நடத்த அவரின் பக்தி மேன்மையை uஉலகறிய செய்து ஊசளாருக்கு அல் பாவித்தார் சிவபெருமான். இந்த நிகழ்வுகள் யாவற்றையும்,

**"வேடர்தம் பதியாம் நாகற்(கு)எயிலுடைப் புரங்கள் செற்ற எந்தையார் மைந்த ரான மயிலுடைக் கொற்ற வூர்தி வரையுரங் கிழித்த திண்மை அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளி னாலே"**

**(கண்ணப்பநாயனார் புராணம் பா.எண்12)**

**"கரிப்பரு மருப்பின் முத்தும் கழைவிளை செழுநீர் முத்தும் பொருப்பினின் மணியும் வேடர் பொழிதரு மழையே யன்றி வரிச்சுரும் பலைய வானின் மலர்மழை பொழிந்த தெங்கும்; அரிக்குறுந் துடியே யன்றி அமரர்துந் துபியும் ஆர்த்த''**

**(கண்ணப்பநாயனார் புராணம் பா.எண் 14)**

**அந்தண் மறையோர்² ஆகுதிக்குக் கறக்கும் பசுக்க ளான வெலாம், சிந்தை மகிழ்ந்து பரிவினால் திரளக் கொடுபோய் மேய்ப்பான்போல், கந்தம் மலிபூம் புனல்மண்ணி மணலிற் கறந்து பாலுகுத்து " (சிறுதொண்டர் புராணம் பா.எண் 42)**

**''உலகினில் ஒழுக்கம் என்றும் உயர் பெருந்தொண்டை நாட்டுநலம்மிகு சிறப்பின் மிக்க நான் மறை விளங்கும் மூதூர்குல முதல் சீலம் என்றும் குறைவுஇலா மறையோர் கொள்கைநிலவிய செல்வம் மல்கி நிகழ் திருநின்ற ஊராம்"**(பூசலார் புராணம் பா.எண்02)

பெரிய புராணம் இவ்வாறான பாடல்களின் வழி சான்று பகர்கிறது. கட்டற்ற அன்பின் வெளிப்பாடாக சிவபெருமானுக்கு இப்படித்தான் பூஜை செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை எல்லாம் கடந்து தங்களுக்குத் தெரிந்தால் போல தங்களின் அன்பை தனக்கென ஒரு நெறியை கொண்டு இறைவனின் அருளை அடைந்தவர்களாக இவர் போன்றவர்கள் சுட்டப்தப்படுவதற்கு காரணம் உண்மையான அன்பிற்கும் பக்திக்கு மட்டுமே இறைவனை கட்டுப்படுவான். என்பதனை சான்றுகளாக தொகுத்துரைக்கும் பேரிலக்கியம் சிறுத்தொண்ட புராணமாகும்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**அடிமை நெறி**

அடிமை நெறி என்பதுஇறைவனுக்குத் தொண்டன் அடிமையானவன் ஆகவும் தொண்டனுக்கு இறைவன் அடிமையானவன் ஆகவும் கருதப்படும் நெறி அடிமை நெறி எனலாம். **சுந்தர பெருமானின்** திருமணத்தின் போது சிவபெருமானே வந்து தடுத்தார் கொண்டு சுந்தரர் எனது அடிமை என்று ஓலையை காட்டிய சிவபெருமான் திருவெண்ணைநல்லூர் என்னும் இடத்தில் தடுத்தார் கொள்கிறார்.

இதனை,

**"கற்பகத்தின் பூங்கொம்போ**

**காமன் தன் பெருவாழ்வோ**

**பொற்புடைய புண்ணியத்தின்**

**புண்ணியமோ புயல் சுமந்து**

**வில்குவளை பவளமலர்**

**மதிபூத்த விரைக் கொடியோ**

**அற்புதமோ சிவன் அருளோ**

**அறியேன் என்று அதிசயித்தார்"**

**[பெரியபுராணம்பாடல் எண். 286]**

**"பித்தாபிறை சூடீபெரு**

**மானே அருளாளா**

**எத்தான்மற வாதேநினைக்**

**கின்றேன்மனத் துன்னை**

**வைத்தாய்பெண்ணைத் தென்பால்**

**வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்**

**அத்தாஉனக் காளாயினி**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**அல்லேன்எனல் ஆமே. (ஏழாம் திருமுறை 01)**

**"வீட்டு வேலை செய்யக் கண்ணன் - வந்து**

**வேலைகள் செய்திடக் கூடினான்**

**பாட்டுப் பாடிப் பணி செய்யவே - ஒரு**

**"(கண்ணன் பாட்டு 02)**

இவ்வாறான பாடல் வரிகள் காட்சிப்படுத்துகின்றன. பின்னாளில் பாரதியார் கண்ணன் எனது அடிமை என்று தனது கவிதைகள் நேசிக்கிறார். இவ்விரண்டு நிலைகளும் அன்பின் உச்சபட்ச நெறியாக இந்த அடிமை நெறியை குறிப்பிடலாம். அடிமை நெறி குறித்து ஆய்வாளர் தேன்மொழி,**கண்ணனைக் கடவுளாகவும் மற்றொரு இடத்தில் தனக்குச் சேவகனாகவும் காண்கிறார் தெய்வத்திற்குச் சேவகம் செய்வதே மனிதப் பிறவியின் பெரும் பேறாகக் கருதப்பட்ட நிலையில் பாரதி கண்ணனை தனக்குச் சேவகனாகப் பாவிக்கிறார்." (சர்வதேச தமிழாய்வு இதழ் ப.எண்3 )**

தனது ஆய்வு கட்டுரையில் இவ்வாறாக வெளிப்படுத்துகிறார். பாரதியார் கண்ணனை பாதிப்பது போன்றே சிவபெருமான் சுந்தரர் பாவிக்கிறார் என்பது தெளிவு. சுந்தரர் பெருமான் சிவபெருமானை திட்டினாலும் திருவெண்ணைநல்லூர் என்னும் இடத்தில் அருள்பாவித்தார்.

**நாயகன் நாயகி நெறி**

மனித இனம்அன்பின் பால் பட்டது.மனிதர்கள் எல்லா நிலைகளிலும் யாரேனும் ஒருவரின் மீது அன்பு கொண்டவர்களாகவே தனது வாழ்வை நகர்த்த முற்படுபவர்கள். ஆதலால் தான் தமிழர்களின் தொடக்க இலக்கியமான சங்க இலக்கியம் அன்பை பெரும்பான்மையாக எல்லா நிலைகளிலும் பதிவு செய்துள்ளது. அதனைத் தொடர்ந்து அற இலக்கியம் அன்பிற்கு அன்பின் ஒருமைப்பாட்டிற்கு

**"காதலர் தூதொடு வந்த கனவினுக்கு**

**யாதுசெய் வேன்கொல் விருந்து"(திருக்குறள் 1211 )**

**"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**

**முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்**

**மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்னைக்**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழிநான் "**

**(நாச்சியார் திருமொழி -6.6)**

இவ்வாறான சான்றுகளைப் பகர்கிறது. இவ்வாறான பண்பாட்டின் மரபின் அடிப்படையில் வளர்ந்த அடியவர்கள் நாயகன் நாயகி நெறியை பின்பற்றினர். இவ்வாறான இறை நெறி பாடல்களை ஆய்வாளர்கள் .

**'நாயகன் - நாயகி நிலையினை (Bridal Mysticism) உலகின் பெரும்பான்மையான இறைநெறி இலக்கியங்கள் அனைத்திலும் காணமுடிகின்றது''**

**(தமிழும் உலகச் செம்மொழிகளும் பக்க எண் 155]**

இவ்வாறாக வரையறுத்து உரைக்கின்றனர். சைவ சமய பாடல்களில் மனித ஆன்மாவை காதலனாகவும் இறைவனை காதலியாகவும் பாவித்து நோக்கும் மனப்பான்மையை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. சைவ சமய பாடல்களில் மனித ஆன்மாவை காதலனாகவும் இறைவனை காதலியாகவும் பாவித்து நோக்கும் மனப்பான்மையை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

**''போதோ விசும்போ புனலோ**

**பணிக ளதுபதியோ யாதோ**

**வறிகுவ தேது மரிதி யமன்விடுத்த தூதோ**

**வனங்கன் றுணையோ விணையிலி**

**தொல்லைத் தில்லை மாதோ**

**மடமயி லோவென நின்றவர் வாழ்பதியே..**

**தெரியவரியதோர் தெய்வமென்ன அருவரைநாடன் ஐயுற்றது."(திருக்கோவை பாடல் 2)**

**"காடுடைய சுடலை பொடி பூசி**

**என் உள்ளம் கவர் கள்வன்"(தேவாரம் 01)**

பெரியபுராணத்தில் பிள்ளை பாதையை புராணம் பாதி என்று சொல்லும் அளவிற்கு **திருஞானசம்பந்தரின்** பாடல்கள் அதிகமாக உள்ளன. திருஞானசம்பந்தரை போன்றே



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

**மாணிக்கவாசகரின்** திருக்கோவையிலும் இவ்வாறான பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் மாணிக்கவாசகரின் மீது கொண்ட பேரன்பால் வைகையில் வெள்ளம் கரை புரண்டு ஓடச் செய்தார். இவ்வாறான பல நிகழ்வுகளில் சிவபெருமான் மாணிக்கவாசகருக்கு அருள் பாவித்துள்ளார்.

**தோழமை நெறி**

இறைவனை தனது தோழனாக பாவித்து நமது தோழனிடம் நாம் எவ்வாறு உதவிகளை கேட்போமோ அதனைப் போன்று இறைவனாகிய சிவபெருமானை தோழனாக நினைத்து உதவிட செய்கிறார்.

**"ஈசன் அடியார் பெருமையினை**

**எல்லா உயிரும் தொழ எடுத்துத்**

**தேசம் உய்யத் திருத்தொண்டர்**

**தொகைமுன் பணித்த திருவாளன்**

**வாசமலர் மென்கழல் வணங்க**

**வந்த பிறப்பை வணங்குவோம்**

[ சேக்கிழார் புராணம் பா. 1270]

அதுவும் தனது ஆணைக்கு ஏற்ப சிவபெருமான் இவர் கூறும் இடத்தில் அமர்ந்து தனக்கு இருவரை திருமணம் செய்து வைக்க உரையாடும் நிகழ்வுகள் தோலைமை நெறிக்கான சிறந்த சான்றுகளாக அமைகின்றன. எப்படி பாரதியார் கண்ணனை தனது தோழனாக என் நினைந்து பாடுகிறாரோ அதைப்போல.

**முடிவுரை**

பக்தி இலக்கியங்கள் தோன்றிய காலத்திற்கு முன்னரே நம் தொன்மையான சங்க இலக்கியத்திலும் தமிழில் கிடைத்துள்ள முதல் இலக்கணமான தொல்காப்பியத்திலும் இறைநெறியை சிறப்பிக்கும் பாடல்கள் இடம்பெற்றிருப்பதை நம்மால் அறிய முடியும். பக்தியை வளர்பதற்கு என தனியாக நூல்களும் அடியவர்களும் பின்னாளில் தத்தமது சமயத்தை வளர்பதற்கு முயற்சித்து அதில் வெற்றியும் கண்டனர். நாயன்மார்கள் சைவசமயத்தைத் தமிழகத்தில் வளர்த்து பெ7ygரும் பங்காற்றினர். சைவ சமயத்தை வளர்க்க பங்காற்றியவர்களின் பெருமையை அவர்கள் பின்பற்றிய பக்தி நெறியின் என்னும் பொறுமையின் அடிப்படையில் கட்டுரையை ஆராய்ந்துள்ளோம்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

**துணை நூல் பட்டியல்**

[1]. அருணாச்சலம் தமிழும் உலக செம்மொழிகளும் முதல் பதிப்பு 2011பதிப்பகம் பாவை பப்ளிகேஷன்ஸ் சென்னை.

[2]. ஆண்டாள் நாச்சியார் திருமொழிகமர்ஷியல் காம்ப்ளக்ஸ் சிவகாசி 24 முதல் பதிப்பு 2010

[3]. உமா பெரிய புராணத்தில் காணப்படும் வேளாண் மக்களின் பண்பாட்டுக் கூறுகள் சர்வதேச தமிழாய்வு இதழ் தொகுப்பு 4 வெளியீடு16 ஆண்டு2022 DOI;10;34256/irjt2243167

[4]. கலையரசி தமிழ் இலக்கியங்களில் பக்தி நெறி களஞ்சியம் சர்வதேச தமிழாய்வு இதழ் தொகுப்பு 4ஆண்டு 2025

[5]. கல்யாணசுந்தரம் நாயன்மார்த்திறம் முதல் பதிப்பு 1937 பதிப்பகம் சாது அச்சகம் ராயப்பேட்டை சென்னை

[6]. சகுந்தலை திருத்தொண்ட புராணத்தில் வழிபாட்டு மரபு சர்வதேச தமிழாய்வு இதழ் தொகுப்பு 4 வெளியீடு 22 கால் 2022 DOI 10:34256/irjt24-322250

[7]. சுப்ரமணிய முதலியார் கண்ணப்ப நாயனார் புராணம் முதல் பதிப்பு 1939 பதிப்பகம் கோவை

[8]. சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் முதல் பதிப்பு 1950காசி மடம்திருப்பனந்தாள்.

[9]. சேக்கிழார் பூசலார் புராணம் தமிழ் இணைய கல்வி கழகம் சென்னை

[10]. 10.சேசன் வாழ்க்கை வரலாறும் பாடல்களும் முதல் பதிப்பு2004 படிப்பு எம்.கே. எம் பதிப்பகம் சென்னை

[11]. ஞானசம்பந்தம் அ.ச பெரியபுராணம் ஓர் ஆய்வு முதல் பதிப்பு 1987 பதிப்பு தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

[12]. 12.ஞானசம்பந்தன் தந்தி அலங்காரம் மூலமும் உரையும் முதல் பதிப்பு 2010 பதிப்பு பதிர் பதிப்பகம் திரு வையாறு

[13]. 13. தாயுமானவர் திருவருட்பா மூலமும் உரையும் முதல் பதிப்பு1942 பதிப்பு அருட்பெருஞ்ஜோதி அச்சகம் சென்னை

[14]. 14. தேன்மொழி பாரதியின் கவிதைகள் கண்ணன் என்னும் மனிதன் சர்வதேச தமிழாய் இதழ் தொகுப்பு4 வெளியீடு 11 ஆண்டு2022 DOI:10:34256/irjt2243111

[15]. 15. பரிமேலழகர் திருக்குறள் மூலமும் உரையும் முதல் பதிப்பு 1916 பதிப்பு மதுரை பல்கலைக்கழகம் மதுரை

[16]. 16பாரதியார் கண்ணன் பாட்டு முதல் பதிப்பு 2010 சுவாமிமலை பதிப்பகம் திருவண்ணாமலை

[17]. 17 பேராசிரியர் திருக்கோவையார் முதல் பதிப்பு 1995 அண்ணாமலை பல்கலைக்கழகம்

[18]. 18. வசந்தகுமாரி பெரிய புராணத்தில் வாழ்வியல் பிரணவ் தமிழில் ஆய்வுகள் சிறப்புஇதழ் தொகுப்பு 2 வெளியீடு 3 ஆண்டு 2023

[19]. 19வெங்கட்ராமன் நற்றிணை மூலமும் உரையும் முதல் பதிப்பு 1989 பதிப்பு பூவே சாமிநாதையர் நூல் நிலையம் சென்னை



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

Tamilmanam

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

## Reference

[1]. Aruṇaccalam tamiḻum ulaka cemmoḻikaḷum pavai ceṉṉai 600018mutal patippu 2011
[2]. Aṇdaḷ nacciyar tirumolikamarṣiyal kamplaks civakaci 24 mutal patippu 2010
[3]. Uma periya puraṇattil kanappatum velab makkalinpanpattuk kurukal sarvadasa amilayvu ital thokuppu4 veliyitu1 6andu 2022 DOI;10;34256/irjt2243167
[4]. Kalaiyaraci tamil ilakkiyaṅkaḷil pakti neṟi kaḷanciyam carvatēca tamiḻayvu itaḻ tokuppu 4antu 2025
[5]. Kalyaṇacuntaram nayaṉmarttiṟam mutal patippu 1937 patippakam catu accakam rayappeṭṭai ceṉṉai
[6]. Cakuntalai tiruttoṇṭa puraṇattil vaḻipaṭṭu marapu carvateca tamiḻayvu itaḻ tokuppu 4 veḷiyiṭu 22 kal 2022 DOI 10:34256/Irjt24-322250
[7]. Supramaṇiya mutaliyar kaṇṇappa nayaṉar puraṇam mutal patippu 1939 patippakam kovai
[8]. Cekkiḻar tiruttoṇṭar puraṇam mutal patippu 1950 kaci maṭam tiruppaṉantaḷ
[9]. Ckekiḻar pucalar puraṇam tamiḻ iṇaiya kalvi kaḻakam ceṉṉai
[10]. 10 Sesan valkkai varalaaum paṭalkaḷum mutal patippu2004 paṭippu em.Ke. Em patippakam cennai.
[11]. NanacampantamA.Ca periyapuraṇam oru ayvu mutal patippu 1987 patippu tancai tamiḻ palkalaikkaḻakam tancavur
[12]. Naṉacampantaṉ tanti alankaram mulamum uraiyum mutal patippu 2010 patippu patir patippakam tiruvaiyaṟu
[13]. Tayumaṉavar tiruvaruṭpa mulamum uraiyum mutal patippu1942 patippu aruṭperunjoti accakam cennai
[14]. Teṉmoḻi paratiyiṉ kavitaikaḷ kaṇṇaṉ eṉṉum maṉitaṉ carvateca tamiḻay italtokuppu4 veḷiyiṭu 11 aandu2022 DOI:10:34256/Irjt2243111
[15]. Parimalalakar tirukkuraḷ mulamum uraiyum mutal patippu 1916 patippu maturai palkalaikkalakam maturai
[16]. Barathiyar Kannan paṭṭu mutal patippu 2010 cuvamimalai patippakam tiruvaṇṇamalai
[17]. 17.peraciriyar tirukkovaiyar mutal patippu 1995 annamalai palkalaikkalakam
[18]. 18 Vacantakumari periya puraṇattil valviyal piraṇav tamilil ayvukal cirappuitaḻ tokuppu 2 veḷiyiṭu 3 aṇdu 2023
[19]. 19.venkatraman narrinai mulamum uraiyum mutal patippu 1989 patippu puve caminataiyar nul nilaiyam cennai


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)